# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

**KALIA BROTHERS (Regd.)**

JULLUNDUR CITY—N. INDIA

*

# ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

*

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

**கலியா பிரதர்ஸ்** (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy
## (Coimbatore) Limited.
## H. O.: Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments.

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752), Cannanore (Phone 92), Palghat (Phone 195), Kozhikode (Phone 984), Ernakulam (Phone 494), Ponani (Phone 41), Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
# பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

*ரஸசாலா:*
*28, A. தென்னூர் ரோடு,*
**திருச்சிராப்பள்ளி 1.**

*ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:*
*31, சின்னக்கடைத் தெரு.*
**திருச்சிராப்பள்ளி 2.**

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

**A. ராகவராவ்,** *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

**கீழ ராஜவீதி, — புதுக்கோட்டை.**

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வனாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யனாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வனாத சர்மா
பிரதான வைத்யர்.




# வைத்ய சந்திரிகை.

**தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.**

| தொகுதி 23<br>Vol. 23 | பிலவ – ஐப்பசி, கார்த்திகை.<br>NOVEMBER 1961 | பகுதி 11<br>No. 11 |
|---|---|---|


**आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥**

## எம்பெருமான் தந்வந்தரி.

சென்ற 6—11—1961 திங்கட்கிழமை யன்று தநத்ரயோதசி ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் தந்வந்தரி ஜயந்தி நாடெங்கும் கொண்டாடப்பட்டது. தேய்வுறாத—முடிவுபெறாத உடல் மனோ பலத்தைப் பெற—அமரத்துவத்தைப் பெறப் பாற்கடலைக் கடைந்த தேவாஸுரர்களின் கடும் முயற்சியின் பயனாகப் பிறந்த அமுதத்தை அவர்களுக்கு அளிக்க அமிருத கலசம் ஏந்தி பகவான் தந்வந்தரி ஐப்பசி மாதத்தில் கிருஷ்ண திரயோதசியில் ஹஸ்த நக்ஷத்ரத்தில் தோன்றினாரென்பது ஐதிஹ்யம். மேலிருகைகளில் சங்கசக்கிரங்களும் கீழிருகைகளில் அமிருதகலசம் திவ்யௌஷதி இவையும் தாங்கித் தோற்றமளிக்கும் எம்பெருமானின் திருவுருவை ஸ்ரீரங்கம் ரங்கநாத தேவாலயத்தில் அர்ச்சையுருவில் நாம் காணப் பேறு பெற்றிருக்கிறோம். பிரதி வருஷமும் ஆயுர்வேத வைத்யர்கள் சார்பில் அங்கு பகவானுக்கு விசேஷ ஆராதனைகள் செய்து லோகக்ஷேமத்தைப் பிரார்த்தித்து வருகின்றனர். நாடெங்கிலும் ஆங்காங்கு வைத்ய ஸபைகள் கூட்டி இந்த ஜயந்தியை விமரிசையாகக் கொண்டாடுவது மிகவும் அவசியமாகின்றது.

# ஆமவாதத்தில் சிகித்ஸை.

[N. வெங்கடேச சர்மா, ஆயுர்வேத சிரோமணி]

[திருச்சி ஆயுர்வேத ஸபையில் 29—10—61 அன்று ஸ்ரீ சர்மா அவர்கள் நிகழ்த்திய உபன்யாஸத்தின் சுருக்கத்தை இங்கு தருகிறோம். நல்ல தேர்ச்சியுள்ள வைத்யரின் அனுபவ பூர்வமான இந்த சிகித்ஸை முறை வாசகர்களுக்குப் பெரிதும் பயன்படுமென நம்புகிறோம்.]

ப்ரக்ருதமான **ஆமவாதம்** என்ற வியாதிக்கு முக்ய நிதானம் பின் வருமாறு :— பரஸ்பர விருத்தமான (ஸம்யோக ஸம்ஸ்கார விருத்தமான) ஆகாரத்தை உட்கொள்ளுபவனுக்கும், சரீர சேஷ்டையே யில்லாமல் உட்கார்ந்து கொண்டே யிருப்பவனுக்கும் அதிக ஸ்நேஹமும் சேர்ந்த பண்டங்களை அமிதமாக புசிப்பவனுக்கும், உடன் தேகப் பயிற்சி செய்பவனுக்கும் ஆமமானது (அஜீர்ண அன்னரஸம்) வாயுவினால் தூண்டப்பட்டு கப ஸ்தானத்தை அடைகிறது.

இந்த கபத்தினால் விதக்தமான ஆமதோஷமானது ரஸத்தை ஆங்காங்கு எடுத்துச் செல்லும் தமனிகளை அடைகிறது பிறகு வாத பித்த கபங்களால் தூஷிப்பிக்கப்பட்டு, சரீரத்தில் நுண்ணிய அவயவ ப்ரதேசங்களுக்கு போஷக ரஸத்தை எடுத்துச் செல்லும் குழாய்களான ஸ்ரோதஸ்களில் அநேக வர்ணத்துடனும் பிசிபிசிப்புடனும் ஒட்டிக் கொள்கிறது, இதனால் அக்னிமாந்தியம், மார்பில் ஓர்வித கனம், உடம்பு வலி, தலை வலி இவைகள் முக்யமாய் ஏற்படுகிறது. அதனால் சரீரமே கட்டை போன்று ஓர்வித விறைப்பு ஏற்பட்டு விடுகிறது. அதனால் சிகித்ஸையில் முக்யமாய் கவனிக்க வேண்டியவை :—

வாதம், கபம் இரண்டையும் போக்கக்கூடிய சிகித்ஸைதான் இதில் முக்யம். இந்த வியாதி குணமாக வெகுநாள் பிடிக்கும். குணமானது போல் தோன்றினாலும் ஸ்வல்பமான வியாஜத்தைக் கொண்டு மறுபடி வியாதி திரும்பி வந்து விடக் கூடும். ஆகவே, நிச்சேஷமாய் நிவ்ருத்தியாகும் வரை சிகித்ஸை செய்ய வேண்டியதவசியம். இதில விரேசனம்— ஸ்நேகபானம்—வஸ்தி சிகித்ஸை, லங்கனம், ஸ்வேத சிகித்ஸை, கடுதிக்த ரஸப்ரதான திரவ்யோபயோகம் இவைகள் ஹிதமானவை. ஸ்வேத சிகித்ஸையில் முதலில் ரூக்ஷமான தவிடு, மணல், கொள்ளு, சாம்பல், சதகுப்பை முதலியவைகளை வறுத்து வீக்கம் வலியுள்ள விடத்தில் ஒத்தடம் கொடுப்பது விசேஷ குணம் தரும். முருங்

கையிலை, ஆமணக்கிலை, புளியிலை, நொச்சியிலை, எருக்கனிலை, வாதமடக்கியிலை முதலியவற்றை இடித்து துருவிய தேங்கா யையும் கூட்டி வாணலியில் வதக்கி துணியில் கிழியாகக் கட்டி ஒத்தடம் கொடுக்க உடனே வேதனை குறையும். இது பத்ர பங்கஸ்வேதம் எனப்படும்.

புளியிலை, வாதநாராயண இலை, ஆமணக்கிலை, நொச்சி யிலை, வேப்பிலை, முன்னை, தழுதாழை முதலிய வாதஹரமான இலைகளை இடித்து கழுநீரிலோ ஜலத்திலோ நன்கு கொதிக்க வைத்து ஓர் செங்கல்லைப் பழுக்கக் காய்ச்சி அதில் போட நிரம்ப ஆவி வரும். ஆவியை வீக்கம் வலியுள்ள பாகங்களில் பரவும் படி கம்பளித் துணியினால் போர்த்தி வைக்கலாம். இது பாஷ்ப ஸ்வேதம் எனப்படும். ஷை யிலைகளை கழுநீரில் கொதிக்கவிட்டு வீக்கம் வலி வேதனையுள்ள பாகத்தை அமுக்கி வைக்கலாம். இது அவகாஹஸ்வேதம். மற்ற ஸமயங்களில்— சுக்கு, நவசா ரம், தேவதாரு இவைகளை யிடித்துச் சலித்து ஷை தூளை வெந் நீரிலோ, கழுநீரிலோ, புளித்த மோரிலோ. காடியிலோ குழைத்து வீக்கமுள்ள பிரதேசத்தில் பற்றுப் போடலாம். இது ஸுரதாரு லேபம் எனப்படும்.

1. ரக்தபோளம் என்ற சரக்கை கோழிமுட்டை வெண் கருவினால் அரைத்து வீக்கத்தில் பத்துப் போட வீக்கம் வலி குறையும்.

2. மூக்கரட்டை வேர், நீர்முள்ளி ஸமூலம், சுக்கு, அமுக் கராக் கிழங்கு, குன்றுமணி இவைகளை கோமூத்ரத்தினா லரைத்து பத்துப் போடுவதுண்டு.

3. பால்சாம்பிராணி, கூடம், வெண் குங்கிலியம் இவைகளை ஸமபாகமாய் காடி விட்டு அரைத்து கடுகெண்ணை கலந்து சூடு செய்து குழைத்து வீக்கத்தில் மேல் பூசலாம்.

4. வீக்கத்தின் மேல் ஊமத்தங்காயை அரைத்துப் போட லாம்.

5. புளியைக் கரைத்தோ அல்லது புளியிலை இடித்துப் பிழிந்த சாற்றிலோ உப்பையும் சேர்த்துக் கரைத்துக் கொதிக்க வைத்துக் கூழ் போல் வரும்போது பொறுக்கும்படியான சூட் டில் வீக்கமுள்ள விடங்களில் பத்து போடலாம்.

6. ஆமவாதாந்தக் தைலம் மேலே தடவி ஒத்தடம் (தவுடு கொள்ளு, ஓமம்) கொடுக்கவும். இவ்விதமான ஒத்தடங்கள், லேபங்கள் முதலிய சிகித்ஸைகளால் வாயுவுடன் கலந்த ஆம

தோஷம் பக்வமடைந்தால், வேதனை வலி முதலியன குறைந்தால் ஸ்நேகங்களால் அப்யங்க சிகித்ஸை செய்விக்கலாம். இதற்கு பலா தைலம், ராஸ்னாதி தைலம், பிரசாரிணீ தைலம், பலாலாக்ஷாதி தைலம் இவைகள் மிக்க உபயோகமாயிருக்கிறது. இவைகள் பாஹ்ய சிகித்ஸை.

இனி உள்ளுக்கு உபயோகப்படும் ஔஷதங்களாவன :—

1. ஆமணக்கெண்ணையை தசமூல கஷாயத்துடனாவது சுக்கு கஷாயத்துடனாவது கொடுத்து வந்தால் ஆமவாதத்தி லுண்டாகும் வலியை நிவ்ருத்தி செய்யும்.

2. ராஸ்னாதிக்வாதம் :— சித்த்ரத்தை, சீந்தில்கொடி, தேவதாரு, தசமூலம், வெட்பாலரிசி இவற்றாலான கஷாயத்துடன் ஆமணக்கெண்ணை கலந்து கொடுக்க விசேஷ குணம் கொடுக்க வல்லது.

3. ஸஹசராதி கஷாயம் :— மருதாணி வேர், தேவதாரு, சுக்கு இவைகளாலான கஷாயம் குணம் தருகிறது. இத்துடன் ஹிங்குத்ரிகுண தைலம் 1 அவுன்ஸ் கூட்டிக் கொடுக்கலாம்,

இதை உள்ளுக்கு தினஸரி கொடுப்பதால் ஆமவாதம், குல்மம், உதரம், பற்பல சூலைகள், அண்டவாயு, அண்டவிருத்தி முதலியவற்றைக் கண்டிக்கிறது.

4. 'சிலாஜது'வை தசமூல கஷாயத்துடனாவது கோமூத்ரத்துடனாவது கொடுக்கலாம். நோயின் கடுமை நிலைமை குறைந்த பிறகு இதை அறவே ஒழிக்கவும் கிடைத்த நல்ல குணங்களை ஸ்திரப்படுத்தவும் மறுபடி திரும்பி வராமலிருக்கவும் ஓர்வித ஸஹன சக்தியை தேகத்துக்கு ஊட்டவும் "குக்குலு" என்பதை உபயோகிப்பது மிக்க அவசியம். மஹிஷாக்ஷி குக்குலு என்று இதற்கு மற்றொரு பெயருண்டு. இதிலுள்ள மண் கல் தூசி தும்பட்டை இவைகளை நீக்கி பிறகு இதை ஓர் கெட்டித் துணியில் கட்டவேணும். வாயகன்ற பீங்கான் பாத்திரத்தில் ஆடாதோடையிலை சாறு கூட்டி கொதிக்க வைக்க வேண்டியது. இது ஆவியில் வேகும்படியாக மேலே சொன்ன குக்குலுவை மூட்டையோடு தொங்கவிட வேண்டியது. 1 ஜாம காலம் வெந்தபிறகு குக்குலுவை எடுத்து உலர்த்தி எடுத்து நெய்யில் பொரித்து அம்மியிலரைத்து வைத்துக் கொண்டு தினஸரி ½ ரூ. எடை உட்கொள்ள மிக்க நல்ல பயனளிக்கும். மேனாட்டு முறையில் ஆராய்ச்சியாளர்களும் குக்குலுவின் குணத்தை இவ்வித வியாதிகளில் விசேஷ குணமளிப்பதாக சிலாகித்துக் கூறுகின்றனர். இந்த குக்குலு சேர்ந்த

யோகம் யோகராஜகுக்குலு, மகா யோகராஜ குக்குலு, ஸிம்ம நாத குக்குலு போன்ற மருந்துகளாகும். இவற்றில் ஒன்றை கிரமமாய் உபயோகிக்க குணம் அவசியம் கிடைக்கிறது.

ஆமவாத வித்வம்ஸினீ ரஸம் வாதராக்ஷஸரஸம், ரஸ சிந்தூரம், ரஸபஸ்மம், ஸித்த மகரத்வஜம். இவைகளும் இவ் வியாதிகளில் விசேஷகுணமளிக்கின்றன. ஸுகுமாரரஸாயனம் (லேகியம்,) மகாரஸோன பிண்டம். அச்வகந்தாதி லேகியம்— மது ஸ்னுஹி லேகியம், குக்குலு திக்த லேகியம், ஷடி கிருதம், பலா ரிஷ்டம், தசமூலாரிஷ்டம் இவைகளும் அநுபவத்தில் குணம் பயக்கின்றன. மற்றும் ரஸகெந்தி மெழுகு, அகஸ்தியர் குழம்பு, தாம்ரபஸ்மம், ரஸபஸ்மம், ஆறுமுகஸிந்தூரம், பூரபஸ்மம், வீர மெழுகு, வெள்ளை பாஷாண பஸ்மம் முதலியவற்றை உபயோ கித்து விசேஷ குணமேற்படுவது தெரிகிறது.

இவற்றுள் ஒன்றோ, இரண்டோ அல்லது பல மருந்து களோ நோயின் நிலைமைக்குத் தக்கபடியும் சரீரகூறுக்கு தக்கபடி யும் தேசகாலாதிகளை யனுஸரித்து தக்கபடி உபயோகித்தால் நிச்சயமாயும் பூர்ணமாயும் நிவ்ருத்தி யேற்படுகிறதென்பதில் ஐயமில்லை. இனி இவ்வியாதியில் பத்தியாபத்திய கிரமங்களைச் சுருக்கமாய்க் கூறுகிறேன். பழைய சம்பா அரிசி, புராண யவை தான்யம். பார்லி, கொள்ளு, சாமை, கேழ்வரகு, சிவப்பு சம்பா அரிசி. அரைக்கீரை, சிறுகீரை, முருங்கைக்கீரை, மூக்கரட்டை, பேப்புடல், பாகல், இஞ்சி, பூண்டு, மிளகு, சுக்கு, ஓமம், குளிர்ந்த ஜலம், கரைத்த மோர். ஜாங்கல மாம்ஸம், வெள் ளாட்டு மாம்ஸம், புலால் இவைகள் ஹிதமான பத்திய வஸ்துக் களாகும்.

தயிர், மீன் வகைகள், கோழி மாம்ஸம், பால், பசளை, உளுந்து, பயறு, மாப்பண்டங்கள், கெட்ட ஜலம், கீழ காற்று. விருத்தமான ஆகாரம், அஸாத்ம்யமான ஆகார வகைகள். மல மூத்ர வேகங்களை யடக்குதல், கண் விழிப்பு, குருவாயும், பிசு பிசுப்புப் பசையுள்ளவைகளுமான திரவியங்களும் அபத்யமான வைகளாகும். ஆமவாத ரோகிக்கு—பஞ்சகோல மெனப்படும் அரிசிதிப்பிலி, பிப்பலீமூலம் (மோடி), சவ்வியம், சித்ரமூலம், சுக்கு என்னும் இவற்றால் காய்ச்சின வென்னீரே தாஹத் துக்கு மிக்க ஹிதமானது. சக்திக்கேற்ற தேஹப் பயிற்சி செய் விக்கலாம். நதியில் எதிர் நீச்சு போடச் செய்யலாம். மிதமான வியவாயமும் எடுத்துக் கொள்ளலாம். இவைகளால் கபம் மேதஸ் இவைகள் குறையும், பிறகு அப்யங்கம் முதலியன செய்விக்கலாம்.

# குடலில் ஏற்படும் புரீஷசோஷணம்

சிறு குடலிலிருந்து பெருங்குடலில் உணவு செல்லும்போதே அதிலிருக்கும் திரவாம்சமும் நெய்ப்பும் உறிஞ்சப்பட்டு வரளச் செய்யப்படுகின்றது. பக்வாசயத்தில் நடக்கும் இந்த செயல் சோஷணம் எனப்படும். இது அக்னியின் கார்யம் என ஆயுர்வேதம் கூறுகின்றது. இதுபற்றிச் சிறிது ஆராய வேண்டிவருகிறது.

பக்வாசயமான பெருங்குடல் வாயுவின் ஸ்தானம். பச்யமாநாசயமான சிறுகுடல் பித்தஸ்தானம். சோஷணம் என்பதற்கு வரளச் செய்வது எனப் பொருள். வரட்சி என்றவுடனேயே வாயுவின் ஞாபகம் ஏற்படுவது இயற்கை. வாதகலாகலீயத்தில் சரகர் வாயுவின் குணங்களைக் கூறும்போது தோஷ சோஷணத்தையும் குறிப்பிடுகிறார். சக்ரபாணி தோஷங்களுக்கு ஏற்படும் க்லேதத்தை (கசிவை) வரளச்செய்வது என அதை விரிவுபடுத்துகிறார். வாயுவின் முக்ய குணங்களான விசதம்—ரூக்ஷம் என்ற இரண்டும் சோஷணத்திற்கு மிகவும் உதவுபவை. ஸுச்ருதர் 'க்லேதாசூஷணம்' கசிவை உறிஞ்சி இழுப்பது வாயுவின் செயல் என்கிறார். ஆக வாயுவிற்கு வரளச் செய்வதும் (ரூக்ஷணம்—நெய்ப்பை அகற்றுவது) காயவைப்பதும் (சோஷணம்—திரவாம்சத்தை அகற்றுவது) முக்கியத் தொழிலாகும். பித்தம் கபம் இரண்டிலும் வாயுவிற்கு முற்றிலும் மாறுபட்ட திரவம்—ஸ்நிக்தம்—ஸரம் போன்ற குணங்கள் இருப்பதும் கவனிக்கத்தக்கதே. பஞ்சபூத அமைப்பையும் மனதிற்கொண்டு பார்க்குங்கால் விசதம் ரூக்ஷம் சுஷ்கம் என்ற குணங்கள் தோஷ வாயுவிற்கு வாயுவிலும் பிருதிவியிலும் உள்ளது கவனிக்கத்தக்கது. ஆக வாதஸ்தானமான பக்வாசயத்தில் வாதகார்யமான சோஷணம் அக்னியால் நடைபெறுகிறதெனக் கூறவேண்டுமானால் இதன் உட்கருத்தென்ன என்று கண்டுகொள்ள வேண்டியிருக்கிறது.

பக்வாசயத்தில் வந்து சேரும் உணவு புரீஷநிலையை அடையத் தகுந்தது. அங்கு வரும்போது அதில் திரவாம்சமும் நெய்ப்பும் குறையாது தேவையான அளவில் இருக்கிறது. அதன் காரணமாக புரீஷமாகி எளிதில் வெளியேற முடிகிறது. இந்த புரீஷமாகவிருக்கும் பகுதியிலுள்ள திரவத்திலிருந்துதான் மூத்திரத்திற்குப் போஷணம் ஏற்படுகிறது. புரீஷத்திலுள்ள நெய்ப்பை மஜ்ஜதாதுவின் மலமாக குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது. புரீஷத்தில் திரவ-ஸ்நிக்த குணங்களிருந்தால் இந்த இரண்டு குணங்களின் துணை குண

மான ஸரம் எனும் குணமும் கூட இருக்கும். ஸரம் என்பது தான் செல்ல வேண்டிய வழியில் நெகிழ்ந்து செல்வதைக் குறிக்கும். ஆக இந்த மூன்று குணங்கள் ஸமநிலையில் இருந்தால் மலமிளகி சமநிலை யில் வெளியாகிறது. இம்மூன்றும் அளவில் குறைந்தால் ஸரகுணத் திற்கு எதிர்குணமான ஸ்திர குணத்தின் பலத்தால் மலக்கட்டு ஏற்படு கிறது. மலம் அளவிற்கு மீறி இளகாமலும் அளவுக்குமீறிக் கட்டா மலும் இருக்க திரவ—ஸ்நேஹாம்சங்களை அங்கு சமநிலையில் பாது காப்பது அவசியமாகின்றது. அது எதன் கார்யம் என்பதை ஆயுர் வேதம் குறிப்பிடுவதைப் பார்ப்போம்.

पक्वाशयं तु प्राप्तस्य शोष्यमाणस्य वह्निना ।

परिपिण्डितपक्वस्य वायुः स्यात्कटु भावतः ॥

(சரகசிகித்ஸை. 15 அத்)

பக்வாசயத்தை அடைந்த உணவிலுள்ள திரவாம்சம் அக்னியால் சோஷிக்கப்பட்டு உருளும் நிலை ஏற்பட்டு பாகமடைவதால் கடு ரஸம் மிகுந்து வாயு உண்டாகின்றது என்கிறார் சரகர்.

அக்னி எத்தனை விதம் என்பதில் பல கருத்துகள் உள்ளன. ஜடராக்னியே அக்னி. அதன் பல்வேறு அம்சங்கள் தாத்வக்னிகளாக வும் பௌதிகாக்னிகளாகவும் இருப்பவை. இவை 13 என ஒரு பொது வான கணக்கு. சரகரின் கிரஹணீ சிகித்ஸையில் சக்ரபாணி,

अत्र यान्यन्यन्तराणि उपधातुमलादिगतानि तान्यप्यवरुद्धानि भूताग्निष्वेव

என்று மலங்களுக்கும் உபதாதுக்களுக்கும் பாகாதிகாரியான அக் னியை ஒத்துக்கொள்கிறார். அஷ்டாங்க ஹ்ருதயத்தின் உரையாளர் அருணதத்தர் சாரீரம் 3-வது அத்தியாயத்தில் இன்னும் சற்று இதை விரிவுபடுத்தி சிரைகளிலும் தசைகளிலும் கூட ரக்தம் முதலிய தாதுக்களைப் பாகம் செய்யும் அக்னிகள் உண்டு என்றவாறு குறிப் பிடுகிறார்.

तथा सप्तसु सिराशतेषु सप्ताग्निशतानि, पञ्चसु मांसपेशीशतेषु पञ्चाग्निशतानि

என்ற அவரது வசனமும் சக்ரபாணியின் விரிவுரையும் சரீரத்தில் ஒவ்வொரு பரமாணுவிலும் நடக்கும் பாகத்திற்கு அந்தந்த அணு விலுள்ள அக்னி சக்தி காரணமாகிறதென்ற உட்கருத்தைத் தெளி விக்கின்றது எனக்கொள்ளலாம். ஆக பக்வாசயத்தில் புரீஷத்தைப் பாகம செய்ய உள்ள அக்னி அன்ன கிட்டத்திலுள்ள நெய்ப்பையும் கசிவையும் சோஷணம் செய்து விடுகிறது.

நவீன விக்ஞானப்படி இந்த புரீஷாக்னியின் செயலே சில ஜீவாணுக்கள் செய்கின்றன. ஆம பச்யமாசயங்களில் பாசகபித்தம் போல் பக்வாசயத்தில் உள்ள ஜீவாணுக்கள் சில புரதத்திலும சில மாப் பண்டத்திலும் சில நெய்ப்புள்ளவைகளிலும் பாகத்தை ஏற்படுத்தி மாறுதலே உண்டாக்குகின்றன.

*ஆக ஆமபச்யமாசயத்தில் உள்ள பாசகாக்னி மந்தித்து நின்ருலும்* புரீஷாக்னி தன் காரியத்தை ஓரளவு ஈடு செய்கின்றது. அதனால் தான் ராஜயக்ஷ்மரோகத்தில் புரீஷத்தையும் காப்பாற்ற வேண்டும்; மலமென அதிக அளவில் வெளியேறவிடக் கூடாதென நூல்கள் கூறுகின்றன. இது பிரகிருதிசாரீரத்தில் புரீஷாக்னியின் விவரணம். இனி விகிருதிசாரீரத்தில் புரீஷாக்னியின் விவரணத்தைக் காண்போம்.

புரீஷத்தின் திரவத்தன்மையும் ஸரத்தன்மையும் அளவுக்கு மீறிய நிலே அதிஸாரக்ரஹணி நோய்களில் ஏற்படுகின்றது. வாக்படர் இந்நோய்களைக் கூறுகையில் உள்ள வாக்கியம் பின்வருமாறு:—

अर्शोऽतिसारग्रहणीविकाराः प्रायेण चान्योन्यनिदानभूताः ।
सन्नेऽनले सन्ति, न सन्ति दीप्ते रक्षेदतस्तेषु विशेषतोऽग्निम् ।

அர்சஸ் அதிஸாரம் கிரஹணி இவை அக்னி மந்தித்திருந்தால் ஏற்படுகின்றன. அக்னிதீப்தி இருக்கையில் இவை ஏற்படாது. அதனால் அக்னி பலத்தைக் காப்பாற்றுதல் இந்நோய்களில் அவசியம் என்பது இந்நோய்களின் சிகித்ஸாஸூத்ரம். அதிஸாரத்தில் ஆகந்துகாதிஸாரததைத் தவிர மற்றவைகளில் அக்னிமந்தம் முக்ய *மான காரணம். அதனால் எல்லா அதிஸாரத்திலும் வாதிகாதிஸாரத்*தில் கூட லங்கனம் நல்லது லங்கனம் வாதகோபத்தை உண்டாக்கினாலும் வாதாதிஸாரத்திலும் முக்கியமான நிதானமான அக்னி மந்தத்தைப் போக்குவதால் ஏற்றதே. அக்னி பலமுற்றிருந்தால் புரீஷாசயத்திலுள்ள திரவமும் நெய்ப்பும் உறிஞ்சப்பட்டு பிரிக்கப்பட்டு விடுகின்றது. அதனால் அதிஸாரத்திலுள்ள முக்யக்கேடான ஸரணம்-நெகிழ்ந்து திரவமாக வெளியாதல் குறையும். பொதுவாகவும் அக்னி-பித்தங்களை அதிகப்படுத்தும தீக்ஷ்ண உஷ்ணகுண முள்ளவை புரீஷத்தை சோஷணம் செய்து மலக்கட்டை ஏற்படுத்துவதைப் பார்க்கிறோம்.

ஆக புரீஷத்திலுள்ள திரவ-ஸ்நேஹாம்சத்தை வாதாசயமாயினும் அக்னியே முக்கியமாகச் செய்கின்றது. சோஷணத்தில் அக்னி முக்கியச் செயலாளர். வாயு உதவியாளர். அக்னியால் ஏற்படும்

சோஷணத்திற்கும் வாயுவால் ஏற்படும் சோஷணத்திற்கும் சிறிது பேதமுமுண்டு. இதைக் கவனிப்போம்.

அதிஸார சிகித்ஸையில் கிராஹி, ஸ்தம்பனம் என இருவகை ஔஷதங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவைகளின் தனிப்பட்ட குணங்கள் என்ன என்பதை ஸுச்ருதரின் அதிஸார சிகித்ஸையில் டல்லணருரையில் காணலாம்.

संग्राहि स्तम्भनाद्भिन्नं यथा तदभिदध्महे ।
आग्नेयगुणभूयिष्ठं तोयांशं परिशोषयेत् ।
संगृह्णाति मलं तत्स्याद्ग्राहि शुण्ठ्यादयो यथा ।
समीरगुणभूयिष्ठं शीतत्वाद्यत्नभस्ततः ।
विधाय वृद्धिं स्तम्भाति स्तंभनं तद्यथा वटः ॥

அக்னிகுணம் மிக்கபொருள்கள் சுக்கு முதலியவை புரீஷத்தி லுள்ள திரவாம்சத்தைக் காயவைத்து மலத்தை இருக்குகின்றன. இவை க்ராஹியாகும். வாயுகுணம் மிக்கவை. ஆலம் விழுதுபோன்றவை தனது சீதத்தன்மையால் வாயுவை அதிகமாக்கி மலத்தை ஸ்தம்பிக்கச் செய்கின்றன. இவை ஸ்தம்பனமாகும், அதாவது உஷ்ண தீக்ஷ்ண குணமுள்ள பொருளால் தீபனபாசனசக்தி அதிகமாகி திரவமும் நெய்ப்பும் புரீஷத்தில் குறைய திரவ-ஸ்நேஹ குணங்களின் உதவி குணமான ஸரத்தன்மை குறைந்து ஸ்திரகுணம் அதிகமாகி மலம் இறுகிவிடுவது கிராஹியால் ஏற்படுவது. சுக்கு ஜீரகம் ஓமம் திப்பிலி இத்தகையவை. ருக்ஷ-விசத-சீதகுணமுள்ள பொருள்கள் குடலில் விரிந்து சுருங்கும் தன்மையைக் குறைத்து புரீஷ ஓட்டத்தை ஸ்தம்பிக்கச் செய்வதால் மல ஸரணத் தடை ஏற்படுவதை ஸ்தம்பனம் என்பர். அபின் போஸ்தக்காய் வெட்பாலை மாம்பருப்பு நாவல்கொட்டை முதலியவை இத்தகையவை. ஸ்தம்பனமான மலம் முதலில் சிறிது திரவமாகவே இருந்தாலும் கிரமமாக க்ஷீணமான அக்னியாலும் வாயுவாலும் வரளச்செய்யப்பட்டு கெட்டிப்படுகின்றது. ஆக க்ராஹியில் மலம் இறுகுவது முக்யம். மல ஸரணத்தில் கிரமமாக தடை ஏற்படுகின்றது. ஸ்தம்பனத்தில் மலஸரணம் முதலில் தடைபடுகின்றது. பிறகு மலம் கிரமமாக இறுகுகின்றது.

இந்த குணவேற்றுமை சிகித்ஸையில் மிகவும் உதவுகின்றது. பாசனம் முக்யமாக தேவைப்படும் அதிஸார நிலைகளில் ஆக்னேயமான கிராஹிகளையும், ஸ்தமபனம் முக்கியமாகத் தேவைப்படும் நிலைகளில் வாதகுணமுள்ள ஸ்தம்பனங்களையும் உபயோகிப்பதெனப்

பிரித்து ஆமாதிஸாரத்தில் கிராஹியையும் பக்வாதிஸாரத்தில் ஸ்தம்பனத்தையும் உபயோகிக்கும் முறை அமைந்துள்ளது. ஆமாவஸ்தையிலோ, கபாதிஸாரநிலையிலோ ஸ்தம்பனமும் வாதிகாதிஸாரத்திலும், சில பித்தாதிஸார நிலைகளிலும் விஷூசிகா முதலிய கடும் நிலைகளிலும், கிராஹியும் அதிகமாக பயன்படுவதில்லை என்பதுமட்டுமல்லாமல் சில உபத்திரவங்களைச் செய்வதையும் பார்க்கிறோம். இதை மனதிற்கொண்டே சார்ங்கதரஸம்ஹிதையின் உரையாளர் ஆடமல்லர் கிராஹி ஸ்தம்பனம் என்ற இரண்டிற்கும் ஸமமான பொருளை விவரிக்கிறார்.

पक्वामसंग्राहकत्वेन द्विविधं संग्राहकम् । तत्र यत् ग्रहण्यामामं संपाच्य वह्निं कृत्वा तत्स्थं द्रवं च शोषयित्वा स्तंभनं करोति, तदुष्णसंग्राहकम् । यद्द्रव्यमतिसारादौ पक्वमलादिकं संस्तभ्य संग्रहं करोति तच्छीतसंग्राहकम् । एतदनिलगुणभूयिष्ठम् ।

பக்வஸங்கிராஹகம், ஆமஸங்கிராஹகம் என இருவகை கிராஹிப் பொருள்களில் கிரஹணியில் (சிறுகுடலில்) உள்ள ஆமமான உணவைப் பாகம் செய்து அக்னிதீப்தியை உண்டாக்கி திரவத்தைக் குறைத்து மலஸரணத்தைத் தடைசெய்வது ஆமஸங்கிராஹகம் (கிராஹி) ஆகும். இதை உஷ்ணஸங்கிராஹகமென்பர். பக்வமான மலத்தைக் கட்டி அதிஸாரத்தைத் தடுப்பது சீதஸங்கிராஹகம் எனும் பக்வஸங்கிராஹகம், இது வாயுகுணம் மிக்கது.

அதனால் புரீஷத்திலுள்ள திரவத்தையும் நெகிழ்ப்பையும் வறளச் செய்வதில் புரீஷாக்னிக்கும் பக்வாசயகதமான வாயுவிற்கும் உள்ள சக்திபேதங்களை ஓரளவு விவரித்தாயிற்று. வாதாக்னி குணம் மிக்கவை கிராஹியாகும். வாதசீதகுணம் மிக்கவை ஸ்தம்பனமாகும்.

---


ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத
தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

அக்டோபர் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 655 | |
| பெண்கள் | 619 | 1631 |
| சிறுவர் | 357 | |

நிர்வாஹஸ்தர்.
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்.
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை

செய்திகள் :

## இந்திய வைத்யக் கல்வி போதனை :

இந்திய வைத்ய முறைக் கல்வி போதனை விஷயத்தில் ஒரே மாதிரி அகில இந்தியக் கொள்கையை உருவாக்குவது— அம்முறையில் தொழில் நடத்தும் வைத்யர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அந்தஸ்து, தேசிய சுகாதார அபிவிருத்தித் திட்ட அமுலுக்கு அவர்களுடைய ஸேவையை எவ்வாறு பயன் படுத்திக் கொள்வது- ஆகிய விஷயங்கள் குறித்து மத்திய சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

ஸமீபத்தில் இவ்விஷயம் மத்ய சுகாதார கவுன்ஸிலின் ஹைதராபாத் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டபோது ஒரே மாதிரி கொள்கையின் அவசியத்தை அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொண்டனர். வைத்யத் துறையில் நவீன கண்டுபிடிப்புகளை கவனத்தில் கொண்டு விஞ்ஞான முறையில் ஆயுர்வேதத்தைப் பயிலவேண்டுமென மத்ய சுகாதார இலாகா கருதுகிறது. ஆயுர்வேதக் கல்லூரிகளில் ஆராய்ச்சிப் பிரிவு இன்றியமையாதது என்றும் அது கருதுகிறது.

மேனாட்டு— இந்திய வைத்ய முறைகள் இணைந்த கல்வி முறை தோல்வி அடைந்ததாகக் கூறமுடியாதென்றும், சோப்ரா கமிட்டி சிபார்சு செய்தது போன்ற இணைப்பு முறை நாட்டில் எங்கும் பரீக்ஷிக்கப் படவில்லை யென்றும் மத்ய சுகாதார கௌன்ஸில் ஒப்புக் கொண்டது. சென்னையிலும் பிற ராஜ்யங்களிலும் உண்மையில் நிகழ்ந்தது ஆயுர்வேதமும், மேனாட்டு முறையும் ஒருங்கே போதிக் கப் பட்டது தானென்றும், அதைத் தொடர்ந்து அலோபதி டாக்டர்களுக்குச் சமமாக இந்திய முறை வைத்யர்களுக்கு அந்தஸ்து அளிக்கத் தவறியதாலேயே இந்த ஏற்பாடு தோல்வி யுற்றது என்றும். எடுத்துக் காட்டப் பட்டது. கவுன்ஸில் அடுத்த கூட்டம் நடைபெறுவதற்குள் இவ்விஷயமாக ராஜ்ய சர்க்கார்களிடையே கருத்தொற்றுமை நிலவத் தோது ஏற்படு மென்று எதிர் பார்க்கப் படுகிறது.

இதற்கிடையில் சென்னை மைஸூர் சுகாதார மந்திரிகள் ஜாம்நகரிலுள்ள இந்திய வைத்ய முறை ஆராய்ச்சி நிலயம் பட்டப் பிற்காலப் பயிற்சிக் கழகம் ஆகியவற்றிற்கு விஜயம் செய்து ஆயுர்வேத முறை போதனையில் ஆராய்ச்சியின் முக்கிய பங்கை அறிந்து கொள்வரென்று தெரிகிறது.

# திருச்சி ஆயுர்வேத ஸபா

## நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்

திருச்சி ஆயுர்வேத ஸபாவின் நிர்வாஹ ஸமிதிக்கூட்டம் 29-10-61 ஞாயிற்றுக்கிழமை மாலை 3—30 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வைத்ய ஸ்ரீ T. S. ஈஸ்வரன் அவர்கள் தலைமை வஹித்தார்கள்.

அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஸ்ரீ தந்வந்தரி பகவான் ஜயந்தி தினமாகிய 6—11—61 திங்கட்கிழமையன்று வழக்கம்போல் ஸ்ரீரங்கம் தன்வந்தரி கோயிலில் ஸ்ரீ தந்வந்தரி பகவானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வது.
2. ஸபையின் 28வது ஆண்டுவிழாவை வருகிற டிசம்பரில் கரூரில் கொண்டாடுவது.

இதர அவசர விஷயங்கள் ஒன்றும் கொண்டுவரப்படவில்லை.

★ ★ ★ ★ ★

# திருச்சி ஆயுர்வேத ஸபா

## ஸம்பாஷா பரிஷத் கூட்டம்

ஸபாவின் ஸம்பாஷா பரிஷத் கூட்டம் 29—10—61 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் வைத்ய ஸ்ரீ T. S. ஈஸ்வரன் அவர்கள் தலைமையில் நடந்தது. ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ N. வெங்கடேச சர்மா அவர்கள் "ஆமவாத சிகித்ஸை" என்பது குறித்து உபன்யஸித்தார்கள். அங்கத்தினர்கள் சர்ச்சையில் கலந்து கொண்டனர். தலைவருடைய முடிவுரைக்குப் பிறகு காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

# ஆரோக்யக் கட்டுரைகள்.

வைத்ய சந்திரிகையின் மூலமாகப் பொதுமக்களிடையே ஆயுர் வேத விக்ஞானத்தில் காணும் ஸ்வஸ்த விருத்தத்தைப் பிரசாரம் செய்யவேண்டுமென்று மஹாமண்டலம் முயன்று வருகிறது. அதற் குத் தேவையான பிரசாரப் பிரசுரங்கள் தயாரிப்பதற்கு உதவும் வகையில் வைத்யசந்திரிகையில் ஆரோக்யம் சம்பந்தப்பட்ட கட்டு ரைகளை பிரசுரிக்க நினைக்கிறோம் ஆரோக்ய வாழ்க்கைக்கு உதவ ஆயுர்வேதம் கூறும் உபதேசங்களைத் தொகுத்து, கட்டுரையாக அமைத்து அனுப்புமாறு வைத்யர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். கட்டுரைகள் வைத்யர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயன்படுமள வில் சாஸ்திரீயரீதியில் தகுந்த கோட்பாடுகளுடன் அமைக்கப்பட்டி ருக்க வேண்டும். வைத்ய சந்திரிகையில் 4 பக்கங்களுக்கு மேற் படாமல் வெளியாகுமாறு சிறிய சிறிய கட்டுரைகள் தேவை. ஆராய்ச்சிக்கு உதவும் வகையில் மாதிரிக்காக கட்டுரைகளுக்கான தலைப்புகள் சிலவற்றைக் கீழே தருகின்றோம். இத்தலைப்புகளுக் கேற்றவாறோ வேறு தலைப்புகளிலோ எழுதலாம். கட்டுரைகள் ஆயுர்வேத சாஸ்திரப்படி அமைதல் அவசியம். தேவையாயின் விவரணம் முதலியவைகளுக்காக இதர வைத்ய முறைகளிலிருந்தும் மிகக் குறைந்த அளவில் விஷயங்களை எடுத்து எழுதலாம். வைத் யர்கள் இந்தப்பணியில் ஈடுபட்டுக் கூடிய சீக்கிரம் கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

**கட்டுரைகளுக்கான தலைப்புகள்.**

1. ஆரோக்யத்தின் ஸ்வரூபம், அதன் அவசியம்.
2. ஆதர்ச நிலையிலுள்ள ஆரோக்யத்தின் லக்ஷணம்.
3. ஆரோக்யத்திற்கு இடையூறு செய்யும் காரணங்களும் அவைகளை நீக்கும் உபாயமும்.
4. சரீரத்தின் ஆதாரங்களான ஆஹாரம் தூக்கம் பிரம்மசர்யம் இவைகளின் ஸமயோகம்.
5. உணவு—ஹிதம் அஹிதம் இவைகளை பகுத்தாராயும் முறை கலப்படம் அதன் பகுத்தறிவு.
6. இன்றுள்ள நிலையில் உணவு தூக்கம் பிரம்மசர்யம் இவைக ளின் சீர்கேட்டால் ஆயுள் குறைவு—நோய் ஏற்படுவது.
7. ஸ்வஸ்த விருத்தம்—தனிமனிதனது—ஸமூகத்தினுடையது.
8. தினசர்யை ருதுசர்யை
9. மனோவிகாரங்கள்—காரணங்கள்.
10. நோய் வருமுன் தடுப்பது—தொத்துநோய்—அதன் தடுப்பு

11. நோய்க்குக் காரணங்கள் (அஸாத்ம்யேந்திரியார்த்த ஸம்யோகம்—பிரக்ஞாபராதம்—பரிணாமம்.)
12. தேகப்பயிற்சி—ஆஸனங்கள்—பிராணாயாமம்.
13. பசி, தாகம், தூக்கம், காமஸுகம் இவைகளை திருப்தியளிக்கும் வகையில் பூர்த்திசெய்து கொள்ளுதல்.
14. தற்போதைய நெருக்கடியான வாழ்க்கை—அதனால் நோய் வாய்ப்படுதல்.
15. ரஸாயன ஸேவை—வாஜீகரண ஸேவை.
16. இந்திரியர்களின் சராசரி வயதுக்குறைவு. அதைப்போக்கும் வழி.
17. மாணவர்களுக்கு ஆரோக்யவழி புகட்டுதல்.
18. நகரஸபை முதலியவைகள்—கடைப்பிடிக்க வேண்டிய ஸமூக நலப் பாதுகாப்பு ஆரோக்ய பரிபாலன முறை.
19. அதர்மவழி நடத்தை-பேராசை பிறருக்குக் கேடுநினைப்பது போன்றவை, ஆரோக்யத்தைக் கெடுப்பவை.
20. பிரகிருதி (தேகவாகு)க்கேற்ப வாழ்க்கை வழி அமைத்துக் கொள்வது.
21. ஸ்திரீகளின் வாழ்க்கை முறை—ரஜஸ்வலை, கர்ப்பிணி, ஸூதிகா, தாய் இந்நிலைகளில் அனுஷ்டிக்கவேண்டிய தினசர்யை.
22. காமஸுகம் — யுவயுவதிகளின் ஆரோக்யப் பாதுகாப்பு—பிரம்மசர்யம்.
23. கண், காது, மூக்கு முதலியவைகளின் பாதுகாப்பு.
24. ஸ்நானம், அப்யங்கம், உத்வர்த்தனம், முதலியன முறை — அவைகளில் ஏற்படும் லாபம்.
25. சந்தனம் பூசிக்கொள்ளுதல், பூச்சூட்டிக்கொள்ளுதல், தாம்பூலம தரித்தல் இவைகளில் ஏற்படும் லாபம். அழகு ஸாதனங்கள்—பிராசீன நவீனங்களில் உள்ள பேதம்.
26. அழகும், ஆரோக்யமும்.
27. தூக்கம் கண்விழிப்பு-இவைகளின் ஸமயோகம்-ஆரோக்ய வழியாகும்.
28. மலமூத்திராதி வேகங்களைத் தடைசெய்வது. ஸாஹஸம், விஷமாசனம், உடலை இளைக்கவிடுவது.
29. நித்ய நோயாளிகள்.
30. மத்யம், புகையிலை, கஞ்சா, பங்க், அபின் முதலியவைகளின் உபயோகம்.
31. ஆரோக்ய ஸூத்ரங்கள்.

# மத்திய ஸர்க்காரின் கொள்கை திருந்தவேண்டும். (2)

[V. S. நடராஜசாஸ்திரி, திருச்சி.]

மத்திய ஸர்க்காரின் ஆரோக்கிய மந்திரி அவர்கட்கு ஆயுர்வேதமும் விஞ்ஞான மஹத்துவத்தில் சிறந்தது; அதையும் லோக க்ஷேமத்திற்காக நன்கு அபிவிருத்தி செய்யவேண்டும் என்று எண்ணம் இருப்பதாகத் தான் தனி ஆயுர்வேதம் ஸம்பந்தமாய் பேசும் அவருடைய பேச்சுக்கள் காட்டுகின்றன. மத்திய சர்க்காரின் ஆயுர்வேத அபிவிருத்தி ஸம்பந்தமான பேச்சுக்களில், (கார்யங்களில் இதுவரையில் இல்லை) ஆயுர்வேத கல்வி பாட திட்டம் அகில பாரத தேசத்திலும் ஒரே மாதிரியாக அமைய வேண்டும் என்பதும் ஒரு விஷயம்.

இந்த விஷயத்தில் இந்தியாவில் ஒரு வைத்தியருக்காவது மதபேதம் இல்லை. ஆயுர்வேதபாட முறை இந்தியா முழுவதிலும் ஒரே மாதிரியிருந்தால் நல்லது என்று ஆசைப்படுவதோடும் யோஜனை சொல்வதோடும் மட்டும் மத்திய சர்க்கார் வாளாவிருத்தல் கூடாது. மத்திய சர்க்காரே தாங்களே இக்கார்யத்தைச் செய்யவேண்டும். அவர்கள் முதலில் செய்து காட்டாமல் பிராந்திய சர்க்கார்களை செய்யச் சொன்னால் இக்கார்யம் நிறைவேறாது. ஒருநாளும் நிறைவேற முடியாது. ஆலோபதிக் அடிப்படை படிப்பு பிராந்திய சர்க்கார்களைச் சேர்ந்தவையே. அகில இந்தியாவிலும் எல்லா பிராந்தங்களும் ஆலோபதிக் படிப்பு முறையை ஒரேமாதிரியாக ஏன் அமைத்துக் கொள்ளக் கூடாது, அல்லது முடியாது? என்று எண்ணுவது தான் நமது மத்திய சர்க்காரின் யோஜனைக் குறைவையோ அல்லது ஆயுர்வேதாபிவிருத்தித் துறையில் அந்தரங்கத்தில் எண்ணமின்மையையோ எடுத்துக் காட்டுகின்றது.

ஆலோபதிக் வைத்தியக் கல்விதிட்டம் இந்தியா பூராவும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்ட பெருமைக் கார்யம் இந்தியாவின் பிராந்தீய 'சர்க்கார்களால் ஆரம்பித்துச் செய்யப்பட்டதல்லவே! அக்கார்யம் இந்தியா பூராவும் ஆண்டுள்ள பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தினால் ஆதியிலேயே செய்யப்பட்டது. இங்கிலீஷ்காரர்கள் தீர்க்கதர்சிகள். ஒரே மாதிரியான கல்வித்திட்டம் இந்தியா பூராவும் ஸ்திரமாய் ஸ்தாபிதமாக வேண்டுமானால் அக்கார்யம் ஒரே பாஷை மூலம் அக் கல்வி போதிக்கப் பட்டால்

தான் ஸாத்தியமாகும் என்ற தத்துவத்தையும் நன்கு தெரிந்து ஒரே இங்கிலீஷ் பாஷை மூலமே இந்தியா பூராவிலும் அலோபதியை கற்க ஏற்பாடு செய்தனர். மத்திய அரசாட்சியிலிருந்து திட்டங்களை ஆரம்பித்து, நடத்திக் கொடுத்து, பிறகே மாகாண அதிகாரிகளிடம் நிர்வாஹத்தை ஒப்புவித்தனர்.

நமது சர்க்கார் விதேச அரசாக்ஷி நீங்கி ஸ்வராஜ்யம் பூராவாகப் பெற்ற பின்பும், விதேச அரசாக்ஷியில் விதேசியர்களால் அமைக்கப் பட்ட முறைகளையே தான் எல்லாத் துறைகளிலும் இப்பொழுதும் அநுஷ்டித்துக் கொண்டிருக்கின்றது. விதேசீயர்கள் தங்கள் பண்பாட்டை இந்தியாவில் ஊர்ஜிதம் செய்யும் உத்தேசத்துடன் செய்த பல கார்யங்களையும் நமது சர்க்கார் நமக்கேற்றபடி மாற்றி அமைத்துக் கொள்ளவும் எண்ணுகிற தில்லை. இவ்வளவு மட்டுமல்ல; இந்தியாவின் சிறிது பெரிது இன்றி எந்தவித புதிய அபிவிருத்தித் திட்டத்திலும் விதேசீய முறையை, சிந்தனை தயக்கமின்றி, அநுஸரித்து அநுஷ்டிப்பதே நமது சர்க்காரின் ஸம்பிரதாயம்.

பிரிட்டிஷ் அரசாக்ஷி சமயத்தில் சென்டிரல் கவர்ன்மெண்டு தான் அலோபதியை இங்கிலீஷ் பாஷையில் இந்தியாவில் ஆங்காங்கு நெடுக ஒரே மாதிரி கற்பிக்கும் படியான, அநுஷடிக்கும் படியான ஏற்பாடுகளை முதலில் செய்துள்ளது. அதேபோல இப்பொழுதும் நமது மத்ய சர்க்கார் தான் ஆயுர்வேத முறையின் பாடதிட்டமும், அநுஷ்டானமும் அகில பாரத தேசத்திலும் ஒரேமாதிரியாக நடைபெற வேண்டிய ஸகல ஏற்பாடுகளையும் தாங்களே முதலில் செய்து நடத்திக் காட்டி இதுபோல மேற்கொண்டு இதை நடத்திக் கொண்டிருங்கள் என்று நிர்வாஹப் பொறுப்பை பிற்காலம் பிராந்திய அரசாங்கத்தினிடம் ஒப்புவிக்க வேண்டும்.

ஆலோபதி போல இந்த தேசம் பூராவையும் ஒரே பாட திட்டம் அமைக்கப்பட வேண்டுமானால், ஆலோபதி இத்தேசம் முற்றிலும் ஒரே இங்கிலீஷ் மொழியில் ஆதியந்தம் கற்பிக்கப் படுவது போலவே, ஆயுர்வேதமும் தேசம் பூராவையும் ஒரே முறையில் கற்பிக்கப்பட வேண்டுமானால், தேசம் பூராவும் ஒரே மொழி ஆயுர்வேதத்திற்கும் ஏற்றுக் கொள்ள வேண்டியது முதற் கடமையாகும், ஒரே பொது பாஷையை ஏற்காமல் ஒரு முறையான பாடதிட்டம் ஒருக்காலும் ஸாத்தியமில்லை. அகில பாரதத்திற்கும் ஆயுர்வேத சாஸ்திரம் பற்றிய வரையில் பொது

மொழி ஸம்ஸ்கிருதம் தான் என்று நமது ஸர்க்காருக்குத் தெரியாததில்லே.

ஆதலால் மத்திய சர்க்கார் ஆயுர்வேதாபிவிருத்தியைப் பற்றிப் பேச்சளவில் இல்லாமல், உண்மையில் செயலாற்ற எண்ணமுடையதானுல், ஆயுர்வேதப் படிப்பு பிராந்தீய விஷயம் என்று எண்ணி சொல்லி ஒதுக்காமல், இக் கொள்கையை திருத்திக் கொண்டு, பிராந்தங்களிலும் ஆங்காங்கு ஆயுர்வேத கல்லூரிகளே ஒரு பாடமுறையில் ஒரு பிரதான பாஷையில் முதலில் ஸ்தாபிதம் செய்து கொடுத்து, பிறகு நிர்வாஹத்தை பிராந்த சர்க்காரிடம், அதே மாதிரி நடத்திக் கொண்டிருக்கும் படி ஒப்புவிக்க வேண்டும். கையுடன் ஆயுர்வேதம் பயின்றவர்களுடைய அந்தஸ்தை உயர்த்தி அதைத் தெளிவாய் அறிக்கை செய்துவிட வேண்டும்.

## அபின் கஞ்சா கலந்த மருந்துகள்.

சென்னே ரெவின்யூபோர்டிலிருந்து திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்டிற்குக் கிடைத்த உத்தரவுப்படி மேலும் சில அபின் கஞ்சா கலந்த மருந்துகள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன எனத் தெரிகிறது. அவை பின் வருமாறு :

1. பில்வாதி சூர்ணம். ஸித்தயோக ஸங்கிரஹப்படி— 9 சத விகிதம் கஞ்சா சேர்ந்தது.

2. ஜாதீபலாதி சூர்ணம். சார்ங்கதரஸம்ஹிதைப்படி— 5 சத விகிதம் அபின் சேர்ந்தது.

3. விஷூசீ வித்வம்ஸன ரஸம். சியாமளா வைத்ய ஸஹஸ்ரயோகப் படி— 1¼ சத விகிதம் அபின் சேர்ந்தது.

4. டங்கணுதிவடீ. பாஷா ஸஹஸ்ரயோகப்படி— 10 சத விகிதம் அபின் சேர்ந்தது.

5. சாங்கேர்யாதிவடி. சிகித்ஸாக்ரமம்— 7·2 சத விகிதம் அபின் சேர்ந்தது

இவைகளின் செய்முறை விவரம் பின்னர் சந்திரிகையில் வெளியாகும்.

# ஆயுர்வேத ஸாரம்

( முதல் பாகம் )

( மஹா மண்டல வெளியீடு )

[ ஹிந்துவின் மதிப்புரை. ]

"This is the first part of a series to be brought out on behalf of the Tamil Nad Ayurveda Mahamandal with a view to educating the public on the great value of our inestimable heritage in medicine, namely, Ayurveda. There is of late a tendency to criticise the system as either static or not suited to modern conditions The criticism is born of ignorance of the system due mostly to the fact that the original works are in Sanskrit, studied and understood by only a few This work in Tamil seeking to explain the principles and philosophy of the system is, therefore, of great value to the ordinary layman .. ..."

விலை ரூ. 2—50. தபால் செலவு தனி.

## வைத்யசந்திரிகை வெளியீடுகள்

| | |
|---|---|
| யோகரத்நாகரம் முதற் பகுதி | 2—00 |
| சாரீரச் சொற்கள் அகராதி | 1—00 |
| சாரீர மர்ம விக்ஞானம் | 0—75 |

*தபாற் செலவு தனி. V. P. யில் அனுப்புவதில்லை.*

*முன் பணம் அனுப்பிப் பெறலாம்.*

*பொதுக்கார்யதரிசி,*

**தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,**

*18, சின்னக்கடைத்தெரு, திருச்சி—2.*

***ஆவர்த்த மர்மம் :*** புருவத்தின் மேல் இரு ஓரங்களிலும் பள்ளத்தில் உள்ள ஸந்திமர்மம் ஆவர்த்தம். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன் உள்ளது. இங்கு அடிபட கண் பார்வைக் குறைவோ பொட்டையாவதோ ஏற்படும்.[1]

இதன் அமைப்பில் கண்டாஸ்தி, கபாலாஸ்தியின் முன்னெலும்பு, உள்ளுள்ள ஜதூகாஸ்தி இவைகளின் பூட்டு[2] பங்கு கொள்ளுகின்றது. மூளையின் முன் பகுதியில் பொட்டின் பக்கத்தில், ஜதூகாஸ்தியின் இரு சிறு சிறகுகளும் சேர்கின்றன. இவை கண் கோளக் குகையின் உட்புறத்தில் புலன் படுகின்றன. அதனால் இதில் ஏற்படும் அடி கண்ணை பாதிக்கின்றது,

***சங்கமர்மம் :—*** காதிற்கும் நெற்றிக்கும் நடுவே உள்ள பொட்டு அஸ்திமர்மமான சங்கமர்மமாகும். ஸத்யஃபிராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட உடன் மரணம் ஏற்படும்[3].

இதன் அமைப்பில் சங்காஸ்தியின்[4] காதுப் பக்கத்தை மூடும் பகுதி உள்ளது. மற்றுமுள்ள இங்குள்ள சங்காஸ்தி தமனிகளும்,[5] மூளை தமனிகளும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. சங்காஸ்தி எனும் பொட்டெலும்பும் இவ்விடத்தில் மிகவும் மெல்லியதாக இருப்பதால் லேசான அடிகூட மூளையைத் தாக்கி விடுகின்றது.

***உத்க்ஷேபமர்மம் :—*** பொட்டிற்கு மேல் கேசங்கள் முடியுமிடத்தில் உள்ள ஸ்நாயு மர்மம் உத்க்ஷேபமாகும். விசல்யப்ராணஹர வர்க்கத்தைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன்

---

1. भ्रुवोरुपरि निम्नयोरावर्तौ नाम । तत्राप्यान्ध्यं दृष्ट्युपघातो वा ।
2. Joints of the Molar frontal and sphenoid bones.
3. भ्रुवोः पुच्छान्तयोरुपरि कर्णललाटयोर्मध्ये शंखौ नाम । तत्र सद्यो मरणम् ।
4. Temporal bone.
5. Superficial temporal Artery and middle Meningeal artery.

உள்ளது.[1] இங்கு அடிபட சல்யமுள்ள வரையோ, பழுத்துத் தானே சல்யம் வெளியாகும் வரையோ ஆபத்தில்லை. சல்யத்தைப் பிடுங்கி எடுக்கப் பிராணன் நீங்கும்.

**ஸ்தபநீ மர்மம் :—** இரு புருவங்களுக்கும் நடுவில் ஸ்தபநீ. ஸிராமர்மமாகும். விசல்ய ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குல பரிமாண முள்ளது. இங்கும் சல்யம் விரணம் பழுத்து தானே விழுந்தாலும் சல்யம் தங்கியிருந்தாலும் ஆபத்தில்லை. சல்யத்தைப் பிடுங்கினால் உயிர் நீங்கும்.[2]

இதன் அமைப்பில் நெற்றி ரத்தக் குழாயும்[3] நெற்றியினுள் உள்ள பொந்துகள் நிரம்பிய குகையும்[4] முக்யமானவை. குகையில் பொத்தல் ஏற்பட்டு ரத்தக் குழாய் உடைந்து நிரம்ப மரணம் ஏற்படும்.

**ஸீமந்தமர்மம் :—** தலை எலும்புகளில் ஒன்றோடொன்று பொருந்துமிடம் ஸீமந்தம் எனப்படும். இவை ஐந்து. ஸந்திமர்மப் பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல பரிமாண முள்ளது. காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. இங்கு அடிபட், கிலிபிரமை, மயக்கம் இவைகள் ஏற்பட்டு மரணம் உண்டாகும்.[5]

இதன் அமைப்பில் பங்கு கொள்பவை.

1. மத்ய கபாலத்தின் பொருத்துவாய்[6]
2. பார்ச்வகபாலங்களின் இரு பொருந்து வாய்கள்[7]
3. பின்புற கபாலத்தின் பொருந்து வாய்கள்[8]

---

1. शंखयोरुपरि केशान्ते उत्क्षेपौ नाम। तत्र सशल्यो जीवति, पाकात्पतितशल्यो वा नोद्धृतशल्यः।

2. भ्रुवोर्मध्ये स्थपनी नाम। तत्रोत्क्षेपवत्।

3. Frontal Vein.

4. Frontal Sinus.

5. पञ्चसन्धयः शिरसि विभक्ताः सीमन्ता नाम। तत्रोन्मादभयचित्तनाशैर्मरणम्।

6. Sagittal Suture.


7. Parietal sutures.

8. Occipital suture.

4. முன் கபாலத்தின் பொருந்துவாய்[1]

இவைகளில் அடிபடும் போது மூளைக் கலக்கம், வலி, மூளையில் அடி இவை ஏற்பட்டு சேஷ்டா நாசம், ஸம்க்ஞாநாசம் ஏற்படுகின்றது.

**சிருங்காடக மர்மம் :—** மூக்கு, காது, கண், நாக்கு இவைகளுக்காக வரும் ரத்தக் குழாய்கள் கூடுமிடம் நான்கு சிருங்காடகமர்மங்கள். இவை ஸத்ய: பிராணஹர மர்மங்களாகும். ஸிரா மர்மப் பிரிவைச் சேர்ந்தது.[2] நான்கு அங்குல பரிமாணமுள்ளது. அங்கு அடிபட உடன் மரணம்.[3]




அ. சிருங்காடகம். ஆ. ஆவர்தம்.


மூளையின் அடியில் முக்கோண உருவிலுள்ள இடம் இது. இதில் நேரிடையாக கண்களுக்கு வரும் சிரைகள் சேருகின்றது. தலையின் மேலோ பின்புறத்திலோ தாடையின் மேலோ அடி ஏற்பட கபாலத்தின் அடிப்புறத்திலுள்ள எலும்பு நொருங்கலாம். அப்போது சிருங்காடகம், ஸுஷும்நா காண்டத்தின் தலைப்பகுதி

---

1. Frontal suture.
2. வாக்படர் இதை தமனீ மர்மமாகக் குறிப்பிடுகிறார்.
3. घ्राणश्रोत्राक्षिजिह्वासन्तर्पणीनां सिराणां मध्ये सिरासन्निपाताः शृंगाटकानि, तानि चत्वारि, तत्रापि सद्यो मरणम् ।

இவைகளில் அடி ஏற்பட்டு மரணம் ஏற்படலாம். இந்த ஸ்தானத்தில் அடிபடப் பேச்சு கேந்திரம்[1] திருஷ்டி கேந்திரம்,[2] ச்ரோத்ர கேந்த்ரம்,[3] ருசி-மண கேந்திரம்[4] இவைகள் சேர்குலைகின்றன.

*அதிபதி* :— தலைக்குள் மேற்புறத்தில் சிரைகள் ஸந்திகள் சேருமிடம். வெளிப்புறத்தில் தலைமயிர் சுழித்து நிற்குமிடத்திற்கு நேரே உள்ளிருப்பது. ஸந்திமர்மப் பிரிவைச் சேர்ந்தது. ஸத்யஃப்ராணஹரமாகும். அரை அங்குல பரிமாண முள்ளது. இதில் அடிபட மரணம் ஏற்படும்.[5]



அதிபதி .

இது தலையில் மயிர் சுழித்து நிற்குமிடத்தில் புரடிக்கு மேல் உட்புறத்தில் மூளையின் அடிபாகத்தில் உள்ளது. இங்கு ஐந்து சிரைகள் சேர்கின்றன.[6] இங்குதான் ஹிருதயம், சுவாஸாசயம் இவைகளை இயக்கும் நரம்பு மண்டலமும் மற்ற தசைகளை இயக்கும் நரம்புகளும் பத்து தலை நரம்புகளும் தோன்றுகின்றன.[7]

ஆக விதுரம் 2, பணம் 2, அபாங்கம் 2, ஆவர்த்தம் 2, உத்க்ஷேபம் 2, சங்கம் 2, ஸ்தபனீ 1. ஸீமந்தம் 5, சிருங்காடகம் 4, அதிபதி 1 என தலையிலுள்ள மர்மங்கள் 23 ஆகும்.

---

1. Buccal centre.
2. Visuo Sensory and Visuo Psychic centre
3. Hearing centre.
4. Taste and Smell centre.
5. मस्तकाभ्यन्तरत उपरिष्टात्सिरासन्धिसन्निपातो रोमावर्तोऽधिपतिः, तत्रापि सद्य एव ।
6. Confluence of sinuses, Torcular herophili.
7. Cardiac centre, Respiratory nerve, Vaso motor centre, Iocranial Nerves

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0  1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்

சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்

இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS.**

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,

குங்குமப்பூ முதலியவைகளுக்கு

நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.